# அதுரலிய பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 22 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 31 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் அதுரெலிய பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதுரெலிய பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 திசெம்பர் 01 ஆந் திகதிய 1421/26 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அதுரெலிய பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 யூலை 26 ஆந் திகதி வரையிலும் அகுரஸ்ஸ பிரதேச சபைக்கு அதுரெலிய பிரதேச

சபைக்குமிடையே சொத்துக்களும் பொறுப்புக்களும் பகிர்ந்தளில்கள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,920,981 தொகையான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் 10 காணித்துண்டுகளின் பெறுமதி எவ்வித மதிப்பீடுகளும் இன்றி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி குறைத்து கணக்குகளுக்குச் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 5,028 தொகை பெறுமதியான 34 புத்தங்கள் குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 513,383 தொகையாக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 514,723 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 1,340 ஆக இருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் 117-01-001-2-7906583 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் நிலையான கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் மற்றும் அதற்குரிய கட்டணங்கள் ரூபா 61,281 தொகை செலவினமாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

(அ) இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,878,626 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,856,716 ஆக இருந்தமையால் ரூபா 21,910 தொகை வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 04 வருமான விடயங்களுக்குரிய கணக்குப் பதிவேடுகளின் பிரகாரம் நிலுவை மீதிகள் பி.ச. 07 அறிக்கையின் பிரகாரமான நிலுவைத் தொகைக்குமிடையே ரூபா 222,048 ஆன வேறுபாடு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 68,554 தொகையான கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 32,477,906 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

04 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 27,534,337 பெறுமதியான மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் , காலப்பகுப்பாய்வு, படடோலைகள் போன்றன இன்மையால் அவ்விடயங்களுக்கான கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 148 | பி.ச. 13, 15, 19 படிவங்களை உள்ளடக்கிய பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 164 | சபையின் கணக்குகள் தொடர்பான ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்காக சுருக்கக் கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | விதி 180-184 | சபையின் பணம், களஞ்சியம் மற்றும் சொத்துக்களுக்கு பொறுப்பாக கடமை புரியும் ஊழியர்கள்/ அலுவலர்களினால் பிணை வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்காக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | விதி 217-218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு செய்யப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,576,953 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 4,708,556 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2009 ரூபா. | நிலுவை 2008 ரூபா. | அதிகரித்தல் சதவீதப்படி % | குறைதல் சதவீதப்படி % |
|---|---|---|---|---|
| வீதவரி | 360,763 | 103,008 | 250.2 | - |
| ஏக்கர் வரி | 19,345 | 87,148 | - | 77.8 |
| வாடகை | 42,563 | 393,738 | - | 89.19 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 310,108 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளை சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றத்தில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 149,200 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 93,933 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |

| ---------------------------------------- | 000' | 000' | 000' | 000' | 000' | 000' |
|---|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனம் | 7,716 | 7,835 | (119) | 7,584 | 6,928 | 656 |
| ஏனையவை | 3,705 | 3,185 | 520 | 3,348 | 2,804 | 544 |
| | ----------- | ---------- | --------- | ----------- | ---------- | --------- |
| உப கூட்டுத் தொகை | 11,421 | 11,020 | 401 | 10,932 | 9,732 | 1,200 |
| மூலதன செலவுகள் | 10,374 | 23,287 | (12,913) | 10,100 | 17,555 | (7,455) |
| | ----------- | ----------- | ---------- | ----------- | ----------- | ---------- |
| மொத்தக் கூட்டுத் தொகை | 21,795 | 34,307 | (12,512) | 21,032 | 27,287 | (6,255) |
| | ======= | ======= | ====== | ======= | ======= | ====== |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

## 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 03 | 02 |
| இரண்டாம் தரம் | 09 | 10 |
| ஆரம்ப தரம் | 15 | 11 |
| ஏனையவை(அமைய, | - | 09 |
| | ------- | -------- |
| மொத்தம் | 27 | 32 |
| | ==== | ==== |

(i) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்குகளின் பிரகாரம் பதவியணினரின் சம்பள மற்றும் சபை உறுப்பினர்களின் படிகள் என்பவைகளுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 7,835,488 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 6,807,000 தொகை மாத்திரமே

மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 1,028,488 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத'தஜன' 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 09 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,393,569 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சுற்று நிருப வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவருக்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 90,475 ஆக காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,418,101 ஆகும்.

## 2.6 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 09 உறுப்பினர்களையுடய சபையில் 2010 ஆம் ஆண்டில் உறுப்பினர் கொடுப்பனவாக ரூபா 498,750 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது 12 சபை அமர்வுகள் நடைபெற்றிருந்த போதிலும் அதில் நான்கு உறுப்பினர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர்.

(ii) 2010 ஆம் ஆண்டின் பாதீட்டில் மூலதனச் செலவின் கீழ் சபையின் ஒவ்வொரு உறுப்பினரினதும் பிரேரணைகளை உள்ளடக்கி ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சி விபரங்கள் காணப்படவில்லை.

(iii) 2010 ஆம் ஆண்டின் பாதீட்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 55 வேலைகளின் பட்டிலொன்று காணப்பட்டதுடன் அவைகளின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பாதீட்டின் பிரகாரம் இலக்கிடப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 9,700,000 ஆக இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட 14 உத்தேச வேலைகளின் உள்ளவாறான செலவினம் ரூபா 7,083,917 ஆகும். மேலும் இலக்கிடப்பட்ட 41 உத்தேச வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபைத் தலைவரின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்